# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு - 2023

C

பதிவு எண் :

## ஒன்பதாம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 2.30 மணி

பகுதி - I

மதிப்பெண்கள் : 100

15 x 1 = 15

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. தமிழ் விடு தூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரச மரம் இ) வளம் ஈ) பெரிய
3. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
   அ) திசைச் சொற்கள் ஆ) வடசொற்கள்
   இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
4. தீரா இடும்பை தருவது எது?
   அ) ஆராயாமை, ஐயப்படுதல் ஆ) குணம், குற்றம்
   இ) பெருமை, சிறுமை ஈ) நாடாமை, பேணாமை
5. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வு தேர்வு எது?
   அ) தேசியத் திறனறித் தேர்வு ஆ) ஊரகத் திறனறித் தேர்வு
   இ) தேசிய திறனறி, கல்வி உதவித்தொகைத் தேர்வு
   ஈ) மூன்றும் சரி
6. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
   அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப்பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
7. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ______.
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி
   இ) திரிபுவன வீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
8. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு
   - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,
   அ) பாண்டிய நாடு, சேர நாடு ஆ) சோழ நாடு, சேர நாடு
   இ) சேர நாடு, சோழ நாடு ஈ) சோழ நாடு, பாண்டிய நாடு
9. *விடைக்கேற்ற வினாவைத் தேர்க.*
   விடை : பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.
   அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?
   ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?
   இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?
   ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?
10. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத்தந்த நூல்
    அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின்
    இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



11. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தாமணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு

அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை எழுதுக.

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ______.
அ) பெரியபுராணம் ஆ) தமிழ்விடுதூது இ) முத்தொள்ளாயிரம் ஈ) புறநானூறு

13. இப்பாடலை இயற்றியவர் ______.
அ) சேக்கிழார் ஆ) பாரதிதாசன்
இ) திருத்தக்கத்தேவர் ஈ) அறிந்துகொள்ள இயலவில்லை

14. பிரித்து எழுதுக : முத்தமிழ்
அ) மூன் + தமிழ் ஆ) மூன்று + தமிழ் இ) முத் + தமிழ் ஈ) மு + தமிழ்

15. முத்திக்கனி - இலக்கணக்குறிப்பு எழுதுக.
அ) உருவகம் ஆ) பண்புத் தொகை இ) வினைத்தொகை ஈ) உவமைத் தொகை

## பகுதி - II

### பிரிவு - அ

குறிப்பு : எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி.
(வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4x2=8

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்.
ஆ) 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டுவரப்பட்டது.
17. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
18. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்புத் தருக.
19. 'பகுத்தறிவு' என்றால் என்ன?
20. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
21. 'மிகுதியான்' - எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - ஆ

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x2=10

22. பிழை நீக்கி எழுதுக.
அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.
ஆ) குழலியும் பாடத் தெரியும்.
23. கலைச்சொல் தருக :
அ) Video Conference ஆ) Social Reformer
24. ஒரு தொடரில் இரு வினைகளை அமைத்து எழுதுக.
அ) குவிந்து - குவித்து ஆ) சேர்ந்து - சேர்த்து
25. பொருள்தருக :
அ) வனப்பு ஆ) தாமம்
26. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.
அ) எட்டாக்கனி ஆ) ஆகாயத்தாமரை

CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



27. வல்லினம் மிகும் இடங்களுக்கு இரண்டு சான்றுகள் தருக.

28. இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக் குறிப்புத் தருக.

## பகுதி - III

### பிரிவு - அ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக் குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை, இந்தோ-ஆசிய மொழிகள், திராவிட மொழிகள், ஆஸ்திரோ ஆசிய மொழிகள், சீன-திபெத்திய மொழிகள் என அழைக்கப்படுகின்றன. பல கிளை மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

அ) இந்தியாவில் பேசப்படும் மொழிகளின் எண்ணிக்கை எத்தனை?

ஆ) நான்கு மொழிக்குடும்பங்கள் யாவை?

இ) இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று கூறியவர் யார்?

30. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

31. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?

### பிரிவு - ஆ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் மட்டும் விடையளிக்கவும். 2 x 3 = 6

(வினா எண் 34க்கு கட்டாயம் விடையளிக்கவேண்டும்)

32. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

33. குறிப்பு வரைக - போக்கியோ கேட்டஸ்.

34. அடிபிறழாமல் எழுதுக :

'ஒன்றறி வதுவே' - எனத்தொடங்கும் தொல்காப்பியரின் பாடல்.

(அல்லது)

'சொல் அரும்' - எனத்தொடங்கும் சீவக சிந்தாமணி பாடல்

### பிரிவு - இ

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6

35. தன்வினை பிறவினை - எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.

36. வஞ்சப்புகழ்ச்சி அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை - இக்குறட்பாவினை அலகிட்டு எழுதுக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. அ) அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) நயங்களைப் பாராட்டி எழுதுக.

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com
CS CamScanner

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே. - குமரகுருபரர்

39. அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்தாருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :



41. அ) நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) சேர, சோழ பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

42. மொழிபெயர்க்க :

அ) a Nation's culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

ஆ) The art of people is a true mirror to their minds - Jawaharlal Nehru

இ) The biggest problem is the lack of love and charity. - Mother Teresa

ஈ) You have to dream before your dreams can come true. - A.P.J.Abdul Kalam

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ் விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

44. அ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரை வழி நிறுவுக.

(அல்லது)

ஆ) இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

45. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

******

CamScanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com